**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2017–2018 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணை மற்றும் 22,735 பயனாளிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க ரூ.21,13,90,200/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(ப) எண்.66 நாள்: 19–09–2017
ஹேவிளம்பி, புரட்டாசி 3,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:

1. அரசாணை(1D) எண்.85, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 12–12–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் ந.க.எண்.2361/ மா.தி.ந.3.1/2017, நாள் 04.07.2017.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2016–17 ஆம் நிதியாண்டில், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடரவும் மற்றும் 24,556 பயனாளிக்கு தேவைப்படும் ரூ.22,66,48,800/– நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2017–18 ஆம் நிதியாண்டிற்கு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 22,735 பயனாளிகளுக்கு ரூ.21,13,90,200/– கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ.எண். | கல்வி தகுதி | வழங்கப்படும் தொகை | மாதங்கள் | பயனாளிகள் எண்ணிக்கை | தேவைப்படும் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 1. | பள்ளியிறுதி/ மெட்ரிக் மற்றும் அதற்கு கீழான தகுதி | ரூ.600/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 8,911 | ரூ.6,41,59,200/– |
| 2. | மேனிலைப் பள்ளி தேர்ச்சி | ரூ.750/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 6,219 | ரூ.5,59,71,000/– |
| 3. | பட்டதாரி/ முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.1000/– மாதத்திற்கு | 12 மாதங்கள் | 7,605 | ரூ.9,12,60,000/– |
| | மொத்தம் | | | 22,735 | ரூ.21,13,90,200/– |

**3.** மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு, அதனை ஏற்று **2017–18** ஆம் நிதியாண்டில், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலை வாய்ப்பற்றோர் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை தொடரவும் மற்றும் **22,735** பயனாளிக்கு தேவைப்படும் ரூ.**21,13,90,200/–** (ரூபாய் இருபத்து ஒன்று கோடியே பதிமூன்று இலட்சத்து தொண்ணூராயிரத்து இருநூறு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

**4.** பயனாளிகளுக்கு நிவாரண தொகை உரிய நேரத்தில் நேரடியாக வங்கிக் கணக்கு மூலம் வழங்குவதை உறுதி செய்திடும் வகையில் National Informatics Centre (NIC) மற்றும் கருவூல கணக்குத் துறை மூலம் செயல்படுத்தப்படும் Public Financial Management System (PFMS) மற்றும் Direct Benefits Transfer (DBT) முறையினை பின்பற்றிட வேண்டும். அத்தகைய நடைமுறையில் செயல்பாட்டுக்கு வரும் வரை தற்போது பின்பற்றப்படும் வழிமுறைகளை பின்பற்றிட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**5.** மேலே பத்தி **3–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:-

> ‘‘**2235** சமூகப் பாதுகாப்பும் நலனும் **– 02** சமூக நலன் **– 101** மாற்றுத் திறனாளிகள் நலன் **–** மாநிலச் செலவினங்கள் – MJ – வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ள வேலை வாய்ப்பற்ற மாற்றுத் திறனாளி / காதுகேளாதோர் / மனவளர்ச்சி குன்றியோர்களுக்கு வேலை வாய்ப்பற்றோருக்கான படிகள் வழங்குதல்**– 09** உதவித் தொகை **01.** நடப்புச் செலவுக்கான உதவித் தொகை.’’
>
> (து.தொ.கு. **2235–02–101–MJ–0918**)

**6.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.**46194**/நிதி(சந)/**2017**, நாள் **14.09.2017** கண்டுள்ள நிதித் துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை**–5.**
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, இயக்ககம், கிண்டி, சென்னை**–32.**
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை**–9.**
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை**–35.**
முதன்மை மாநில கணக்காயர்(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை**–18.**
முதன்மை மாநில கணக்காயர்(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை**–18** (பெயரில்)

**நகல்:–**
நிதி (சந)த் துறை,சென்னை**–9.**
அரசு முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை**–9.**
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.